DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ம் நாள் சாட்சியாகிய தணிகைவேல் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திரு.வெங்கட்ராமன், Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தணிகைவேல் | வயது | 33 |
| த/பெ. | ராமன் | இனம் | ஆண் |
| கிராமம் | திருப்பெரும்புதூர் | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| சமயம் | | தாலுக்கா | |

**CC.188/2019**

(1, 2, 4, 6 முதல் 10, 15, 16 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 3, 5, 11 முதல் 14 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 3, 5, 11 முதல் 14 எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்)

**மனுவின்பேரில் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை 11.9.2023 அ.சா.7**

1. நான் சம்பவத்தின்போது எஸ்என்ஓய் நிறுவனத்தில் என்ன பொறுப்பில் இருந்தேன் என்றால் குவாலிட்டி உதவி மேலாளராக இருந்தேன். சம்பவ தினத்தன்று எத்தனை தொழிலாளர்கள் கம்பெனியில் உள் வேலை செய்தார்கள் என்றால் 80 நபர்கள் வேலை பார்த்தார்கள். சம்பவ தினத்தன்று நான் எந்த சிப்டில் வேலை பார்த்தேன் என்றால் காலை 7 மணியில் இருந்து மாலை 3 மணி வரை உள்ள சிப்டில் வேலை பார்த்தேன்.

2. 2வது சிப்டில் சம்பவ தினத்தன்று எத்தனை நபர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் 2 நபர்கள்தான் வேலைக்கு வந்தார்கள். மற்றவர்கள் வெளியே நின்றுவிட்டார்கள். அன்றைய தினம் என்ன பொருள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் காரின் உதிரி பாகங்களான வீல் சிலிண்டர், அப்பு, ரிங், அவுசிங் ஆகிய பொருட்கள் தயார் செய்யப்பட்டது. எத்தனை எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை.

3. நான் முதல் விசாரணையில் வருகை புரிந்த தொழிலாளர்களை வைத்து பொருட்களை தயார் செய்யப்பட்டது என்று முதல் விசாரணையில் தெரிவித்துவிட்டு

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-10.pdf

www.ecourtsindia.com

தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் உற்பத்தி எதுவும் செய்யவில்லை. ஆனால் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட பொருட்களை செக் செய்தோம். நிறுவனத்தில் காணாமல் போனதாக சொல்லப்படும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனம் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளது என்றால் அது பற்றி குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது.

4. நிறுவனத்திற்குள் சென்று மெஷின்களை இயக்குவதற்கு எனக்கு அனுமதி உண்டா என்றால் உண்டு. எனக்கு வழக்கு பற்றி எந்த தகவலும் தெரியாது என்றாலும், எனது முதலாளி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5.தொழிற்சாலையில் நியாயமாக போராடிய தொழிலாளர்களை சீர்குலைப்பதற்காக பொருட்களை எடுத்து சென்றதாக நிறுவனம் சார்பில் பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எந்த பதவி நிலையில் உள்ள போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என்னை எந்த இடத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் திருப்பெரும்புதூர் காவல் நிலையத்தில் காலை 11 மணிக்கு விசாரித்தார்கள். எந்த தேதி விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

6. நான் எத்தனை மணிக்கு வேலையை முடித்து விட்டு கம்பெனியை விட்டு வெளியே வந்தேன் என்றால் மறுநாள் அதிகாலை 2 மணிக்கு வந்தேன்.

மறு விசாரணை; இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Sd/-K.Ramkumar,
Judicial Magistrate,
Sriperumbudur.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-10.pdf